1973 பிப்ரவரி 6]

அறவுரைகள், சொற்பொழிவுகள் நடக்காதபொழுது, திருமணங்களுக்கு விட ஏற்பாடு செய்கிற முறையில் அந்தக் கோயிலில் அறவுரை மண்டபம் அமைத்து, அதைத் தொடங்கி நிறைவேற்றி, கோயிலேச் செம்மைப்படுத்தி, சிறப்பாக எல்லோரும் தமிழ் முறையில் வழி படும்படியான முறையில் அமைப்பதற்கு தக்க வகைகளைச் செய்து, அதை எவ்வளவு விரைவில் முடிக்க முடியும் என்பதற்குத் திட்டங்கள், வரைகள் அல்லது வரை படங்கள் போடப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பாதியில் நின்று போன திருமண மண்டபத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல, குறளில் வந்திருக்கின்ற பண்புகளை எல்லோரும் தெரிந்து கொள்ளும் வகையில் வரை படங்கள், ஓவியங்கள், இன்னும் பல நல்ல தெளிவுரைகளைக் கொடுக்கும் வகையில் கட்டிடங்கள், மண்டபங்கள் எழுப்ப வேண்டுமென்று வரை படம் தயார் செய்யப்பட்டு, அவைகளைப்பற்றியெல்லாம் திருப்பணிக் குழுவில் பேசி முடித்திருக்கிறார்கள். அதுவெல்லாம் சீக்கிரம் துவங்குவதற்கான ஏற்பாடுகளை தற்போது அலுவலாளர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

---

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுந்தரேசத் தேவர் கொடுத்துள்ள ஒற்றிவைப்புத் தீர்மானம் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 4-40 பி.ப.

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். பலராமன் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கான திருத்தத்தைப் பிரேரேபிப்பார்.